

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.4.2025) தலைமைச் செயலகத்தில், பால்வளத்துறை சார்பில் 64 நபர்களுக்கும், கைத்தறி மற்றும் துணிநூல் துறை சார்பில் 166 நபர்களுக்கும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் 391 நபர்களுக்கும், என மொத்தம் 621 பணியிடங்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மற்றும் மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியத்தால் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 13 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், பால்வளத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை செயலாளர் திருமதி. வே. அமுதவல்லி, கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறைச் செயலாளர் மருத்துவர் ந.சுப்பையன், பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத் துறை ஆணையர் / ஆவின் நிர்வாக இயக்குநர் ஆ.அண்ணாதுரை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் – மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியத்தால்

# பல்வேறு பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட 621 நபர்களுக்கு பணி நியமன ஆணைகள்!

## முதல்வர் மு.க. ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, ஏப்.6 -

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மற்றும் மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியத்தால் பல்வேறு பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட 621 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.4.2025) தலைமைச் செயலகத்தில், பால்வளத்துறை சார்பில் 64 நபர்களுக்கும், கைத்தறி மற்றும் துணிநூல் துறை சார்பில் 166 நபர்களுக்கும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் 391 நபர்களுக்கும், என மொத்தம் 621 பணியிடங்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மற்றும் மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியத்தால் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 13 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

தமிழ்நாடு அரசின் 2025-26-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், 40,000 பணியிடங்கள் நடப்பு நிதி ஆண்டிலேயே நிரப்பும் பொருட்டு உரிய நடவடிக்கைகளை அரசு துரிதமாக மேற்கொள்ளும் என்ற அறிவிப்பிற் கிணங்க, முதலமைச்சர் அவர்கள் இன்றைய தினம் 621 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

**பால்வளத் துறையில் பணிநியமன ஆணைகள்!**

கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் 2021-2022-ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில், ஆவின் நிறுவனத்தில் சிறப்பான முறையில் வெளிப்படைத் தன்மையுடன் பணி நியமனம் செய்வதற்கு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக தேர்வு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதன்படி, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் கடந்த மே 2021 முதல் இதுவரை, செயற்பணியாளர் (கட்டுமானம்) பதவிக்கு 3 நபர்களும், மேலாளர் (கால்நடை மருத்துவம்) பதவிக்கு 23 நபர்களும், மேலாளர் (நிதி) பதவிக்கு 13 நபர்களும், மேலாளர் (பொறியியல்) பதவிக்கு 7 நபர்களும், மேலாளர் (கட்டுமானம்) பதவிக்கு

1 நபரும், என மொத்தம் 47 நபர்கள் தேர்வு செய்யப்பட்டு, தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் பணியாற்றிட பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர்.

மேலும், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தில் பணிபுரிந்து வெவ்வேறு காலக்கட்டங்களில் உயிர்நீத்த 64 பணியாளர்களின் சட்டப்பூர்வமான வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் இளநிலை செயற்பணியாளர் (அலுவலகம்) மற்றும் முதுநிலை தொழிற்சாலை உதவியாளர் பதவிகளில் பணியாற்றிட பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. இவ்வரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் இதுவரை மொத்தம் 111 நபர்கள் பணிநியமன ஆணைகள் பெற்று பயனடைந்துள்ளனர்.

**புதிதாக தெரிவு செய்யப்பட்ட 64 நபர்களுக்கு பணி நியமன ஆணைகள்!**

பால்வளத் துறை சார்பில் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் பணிபுரிந்திட தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக இளநிலை செயற்பணியாளர் (அலுவலகம்) பணியிடத்திற்கு 29 நபர்கள், பால் அளவையாளர் நிலை-III பணியிடத்திற்கு 11 நபர்கள் மற்றும் முதுநிலை தொழிற்சாலை உதவியாளர் பணியிடத்திற்கு 24 நபர்கள், என மொத்தம் 64 நபர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் 3 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

**கைத்தறி மற்றும் துணிநூல் துறையில் பணிநியமன ஆணைகள்!**

கைத்தறி மற்றும் துணிநூல் துறை சார்பில், கோ-ஆப்டெக்ஸ் விற்பனை பிரிவில் பணி ஓய்வின் காரணமாக நிலவும் பணியாளர்கள் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்யவும், கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களில் கைத்தறி இரகங்களின் விற்பனையை அதிகப்படுத்தும் நோக்கிலும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் 90 ஆண் பணியாளர்கள் மற்றும் 76 பெண் பணியாளர்கள், என மொத்தம் 166 உதவி விற்பனையாளர் பணியிடத்திற்கு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் 5 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

**மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையில் பணிநியமன ஆணைகள்!**

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையில் அவ்வப்போது ஏற்படும் காலிப் பணியிடங்களை இவ்வரசு உடனுக்குடன் நிரப்பி வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் இதுநாள்வரை மருத்துவப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக மருந்தாளுநர்கள், உதவி மருத்துவர் (பொது), உதவி மருத்துவர் (சிறப்பு தேர்வு), ஆய்வக நுட்புநர், இருட்டறை உதவியாளர், களப்பணி உதவியாளர், இரத்த சுத்திகரிப்பு தொழில்நுட்பவியலாளர் உள்ளிட்ட பல்வேறு பணியிடங்களுக்கு மொத்தம் 7346 நபர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக இளநிலை உதவியாளர், உதவியாளர், தட்டச்சர், சுருக்கெழுத்து-தட்டச்சர் ஆகிய பணியிடங்களுக்கு மொத்தம் 1393 நபர்களுக்கு பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர், தட்டச்சர் பணியிடங்களுக்கு 133 நபர்களுக்கு பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. இவ்வரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் இதுவரை 8872 நபர்களுக்கு பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது.

**புதிதாக தெரிவு செய்யப்பட்ட 391 நபர்களுக்கு பணி நியமன ஆணைகள்!**

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியத்தால் 74 இ.சி.ஜி. தொழில்நுட்ப வல்லுநர் பணியிடத்திற்கும், 44 இயன்முறை சிகிச்சையாளர் பணியிடத்திற்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் 205 இளநிலை உதவியாளர் மற்றும் 68 தட்டச்சர் பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கும் பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் 5 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், பால்வளத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை செயலாளர் திருமதி. வே. அமுதவல்லி, கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறைச் செயலாளர் மருத்துவர் ந.சுப்பையன், பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத் துறை ஆணையர் / ஆவின் நிர்வாக இயக்குநர் ஆ.அண்ணாதுரை, கோ-ஆப்டெக்ஸ் மேலாண்மை இயக்குநர் தீபக் ஜேக்கப் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### இந்து சமய அறநிலையத்துறை சார்பில் மறுபதிப்பு செய்யப்பட்ட

# அரிய பக்தி நூல்கள் 100 திருக்கோயில்களில் புத்தக விற்பனை நிலையங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

சென்னை, ஏப்.6-

இந்து சமய அறநிலையத்துறை சார்பில் மறுபதிப்பு செய்யப்பட்ட அரிய பக்தி நூல்கள் அனைவருக்கும் கிடைத்திடும் வகையில் கூடுதலாக 100 திருக்கோயில்களில் புத்தக விற்பனை நிலையங்கள் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.4.2025) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத் துறை பதிப்பக பிரிவின் சார்பில் புதுப்பொலிவுடன் மறுபதிப்பு செய்யப்பட்ட அரிய பக்தி நூல்கள் அனைவருக்கும் கிடைத்திடும் வகையில் கூடுதலாக 100 திருக்கோயில்களில் புத்தக விற்பனை நிலையங்களை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

இந்து சமய அறநிலையத்துறையானது தனது நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொண்டு குடமுழுக்குகள் நடத்துதல், பக்தர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், திருக்கோயிலுக்கு சொந்தமான சொத்துக்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்டெடுத்தல் போன்ற பல்வேறு பணிகளை சீரிய முறையில் மேற்கொண்டு வருவதோடு, சமயத்தின் நன்னெறிகளை அடுத்த தலைமுறையினருக்கு எடுத்துச்செல்லவும், முறையாகப் பாதுகாக்கவும் பதிப்பகப் பிரிவின் மூலம் அரிய பக்தி நூல்கள் மறுபதிப்பு செய்து வெளியிட்டு வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இந்து சமய அறநிலையத்துறையின் பதிப்பகப்பிரிவு தொடங்கப்பட்டு, பரவசமூட்டும் பக்தி இலக்கியங்கள், தலபுராணங்கள், அருட்பணி செய்த அருளாளர்களின் வரலாறுகள், கோயில் கலை நூல்கள், சிலை நூல்கள், காவிய நூல்கள், ஓவிய நூல்கள், தொன்மை வாய்ந்த பழந்தமிழ் ஓலைச்சுவடிகள், இறையடியார்களின் பொன்மொழிகள், மெய்யைப் போதித்து, மெய்யைக் காக்கும் சித்தர் நூல்கள் என அரிய பக்தி நூல்கள் புதுப்பொலிவுடன் மறுபதிப்பு செய்யப்பட்டு இதுவரை இரண்டு கட்டங்களாக 216 பக்தி நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இவ்வாறு வெளியிடப்பட்ட பக்தி நூல்கள் அனைவருக்கும் எளிதில் கிடைக்கும் வகையில் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 103 திருக்கோயில்களில் புத்தக விற்பனை நிலையங்களும் ஆணையர் அலுவலகத்தில் ஒரு விற்பனை நிலையமும் தொடங்கப்பட்டு நூல்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 27.02.2024 அன்று நடைபெற்ற இந்து சமய அறநிலையத்துறை ஆலோசனைக் குழுவின் இரண்டாவது கூட்டத்தில், "இந்து சமய அறநிலையத் துறை பதிப்பக வெளியீடுகளை விற்பனை செய்வதற்கு 103 திருக்கோயில்களில் விற்பனை நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும், கூடுதலாக 100 திருக்கோயில்களில் விற்பனை நிலையங்கள் ஏற்படுத்தப்படும்" என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதனை செயல்படுத்திடும் வகையில் 100 திருக்கோயில்களில் அமைக்கப்பட்டுள்ள புத்தக விற்பனை நிலையங்களை முதலமைச்சர் அவர்கள் இன்று திறந்து வைத்தார். திருக்கோயில் புத்தக விற்பனை நிலையங்கள் துறையின் வரலாற்றில் ஒரு மைல்கல்லாக அமைந்திருப்பதோடு, அவை அறிவுசார் மையங்களாகவும் திகழ்ந்து வருவது பக்தர்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

இந்நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர்கள் திருமதி சி.ஹரிப்ரியா, பொ. ஜெயராமன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

திண்டுக்கல் மாவட்டம், பழனியிலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக மாவட்ட ஆட்சித் தலைவர் செ. சரவணன், பழனி – தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் அறங்காவலர்குழுதலைவர்கே.எம்.சுப்பிரமணியன், இணை ஆணையர்கள் செ. மாரிமுத்து, மு. கார்த்திக், பழனி நகரமன்றத் தலைவர் திருமதி உமா மகேஸ்வரி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**புதிய 100 ஆன்மிக புத்தக விற்பனை நிலையங்கள் குறித்த விவரப் பட்டியல்**

சென்னை மண்டலம் 1 – சௌமிய தாமேதரப் பெருமாள் திருக்கோயில், வில்லிவாக்கம், சோமநாத சுவாமி திருக்கோயில், கொளத்தூர், சென்னை, அங்காளம்மன் திருக்கோயில், இராயபுரம். சந்தான சீனிவாசப் பெருமாள் திருக்கோயில், முகப்பேர், அங்காளம்மன் காசி விஸ்வநாதர் சுவாமி திருக்கோயில், சூலை, சென்னை.

சென்னை மண்டலம் 2 – தண்டீஸ்வரர் திருக்கோயில், வேளச்சேரி, பாம்பன்சுவாமி திருக்கோயில், திருவான்மியூர், ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயில், அமைந்தகரை, முண்டகக்கண்ணியம்மன் திருக்கோயில், மயிலாப்பூர், ஆஞ்சநேயர் திருக்கோயில், நங்கநல்லூர்,

காஞ்சிபுரம் – சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், குமரக்கோட்டம், சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், குன்றத்தூர், சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், வல்லக்கோட்டை, பாடலாத்திரி நரசிம்ம பெருமாள் திருக்கோயில், சிங்கபெருமாள் கோவில், தேனுபுரீஸ்வரர் திருக்கோயில், மாடம்பாக்கம்.

வேலூர் – சுப்பிமணியசுவாமி திருக்கோயில், வள்ளிமலை, காட்பாடி வட்டம், வேலூர் மாவட்டம், பூங்காவனத்தம்மன என்கிற அங்காளபரமேஸ்வரி திருக்கோயில், புட்லூர், திருவள்ளூர் வட்டம் மற்றும் மாவட்டம், செல்லியம்மன் திருக்கோயில், பாலாற்றங்கரை, வேலூர் நகர் மற்றும் மாவட்டம், பெரிய ஆஞ்சநேயர் திருக்கோயில், ஆம்பூர் நகர் வட்டம், திருப்பத்தூர் மாவட்டம், பால சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், ஆண்டார்குப்பம், பொன்னேரி வட்டம், திருவள்ளூர் மாவட்டம்.

திருவண்ணாமலை – மன்னர்சாமி சமேத பச்சையம்மன் திருக்கோயில், முனுகப்பட்டு, சந்திரசூடேஸ்வரர் திருக்கோயில், மலைக்கோயில், சென்னத்தூர், மாரியம்மன் திருக்கோயில், அவதானப்பட்டி, ஆஞ்சநேயர் சுப்ரமணியசுவாமி திருக்கோயில், காட்டினயனபள்ளி, வேணுகோபால பார்த்தசாரதி திருக்கோயில், செங்கம்.

கடலூர் – கொளஞ்சியப்பர் திருக்கோயில், விருத்தாசலம், இராஜகோபாலசுவாமி திருக்கோயில், புதுப்பாளையம், பாடலீஸ்வரர் திருக்கோயில், திருப்பாதிரிப்புலியூர், வீரட்டானேஸ்வரர் திருக்கோயில், பண்ருட்டி, சிவசுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், வேலுடையான்பட்டு, நெய்வேலி.

விழுப்புரம் – சந்திரமௌலீஸ்வரர் திருக்கோயில், திருவக்கரை, இலட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோயில், பூவரசங்குப்பம். அங்காளம்மன் திருக்கோயில், சித்தளூர், சஞ்சீவிராயர் திருக்கோயில், இராவுத்தநல்லூர். அரங்கநாதசுவாமி திருக்கோயில், ஆதி திருவரங்கம், வைகுண்டவாசப்பெருமாள் திருக்கோயில், விழுப்புரம்.

தஞ்சாவூர் – கைலாசநாதர் திருக்கோயில், திங்களூர், நாடியம்மன் திருக்கோயில், பட்டுக்கோட்டை. வீரமாகாளியம்மன் திருக்கோயில், பெரம்பூர், வீரமாகாளியம்மன் திருக்கோயில்,அறந்தாங்கி,முத்துமாரியம்மன் திருக்கோயில், கொன்னையூர்.

நாகப்பட்டினம் – காயரோகன சுவாமி உடனுறை நீலாயதாட்சியம்மன் திருக்கோயில், நாகப்பட்டினம். சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், எட்டுக்குடி, மகா சரஸ்வதி அம்மன் திருக்கோயில், கூத்தனூர், பிறவி மருந்தீஸ்வரர் திருக்கோயில், திருத்துறை பூண்டி, மகாமாரியம்மன் திருக்கோ யில், வலங்கைமான், நவநீதேஸ்வரசுவாமி திருக்கோயில், சிக்கல், அக்னீஸ்வரசுவாமி திருக்கோயில், திருக்கொள்ளிகாடு, இராஜகோபால சுவாமி திருக்கோயில், மன்னார்குடி, தியாக ராஜாசுவாமி திருக்கோயில், திருவாரூர்.

மயிலாடுதுறை – ஆதிகும்பேஸ்வரர் திருக்கோயில், கும்பகோணம், தேனுபுரீஸ்வரர் திருக்கோயில், பட்டீஸ்வரம், சாரநாதப் பெருமாள் திருக்கோயில், திருச்சேறை, சுவேதாரண்யேஸ்வரர் சுவாமி திருக்கோயில், திருவெண்காடு, சீனிவாசப்பெருமாள் திருக்கோயில், நாச்சியார்கோயில்.

மதுரை – காளமேகப்பெருமாள் திருக்கோயில், திருமோகூர், பிரசன்ன வெங்கடாசலபதி திருக்கோயில், தல்லாகுளம். (இ) கள்ளழகர் திருக்கோயில், அழகர்கோவில்,

திண்டுக்கல் – சுந்தர மகாலிங்கசுவாமி திருக்கோயில், சதுரகிரி, திருக்காளாத்தீஸ்வரர் திருக்கோயில், உத்தமபாளையம், பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் உபகோயிலான குறிஞ்சி ஆண்டவர் திருக்கோயில், கொடைக்கானல், பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், மலைக் கோயிலில் கூடுதலாக ஓர் விற்பனை மையம் அமைத்தல், மூங்கிலனை காமாட்சியம்மன் திருக்கோயில், தேவதானப்பட்டி.

திருச்சி – உத்தமர் திருக்கோயில், பிட்சாண்டார்கோவில், மண்ணச்சநல்லூர் வட்டம், சப்தரிஷீஸ்வரர் திருக்கோயில், இலால்குடி, நாகநாதசுவாமி திருக்கோயில், நந்திகோயில் தெரு, ஆஞ்சநேயசுவாமி திருக்கோயில், கல்லுக்குழி, பஞ்சவர்ணசுவாமி திருக்கோயில், உறையூர், பிரசன்ன வெங்கடாஜலபதி திருக்கோயில், குணசீலம், நல்லாண்டவர் வகையறா திருக்கோயில், மணப்பாறை,

திருப்பூர் – கல்யாணபசுபதீஸ்வரர் திருக்கோயில், கரூர், அமணலிங்கேஸ்வரர் திருக்கோயில், திருமூர்த்திமலை, உடுமலைப்பேட்டை, பிரசன விநாகர் திருக்கோயில், உடுமலைப்பேட்டை, திருப்பூர், நாட்டராயசுவாமி திருக்கோயில், மேட்டுப்பாளையம், வெற்றிவேலாயுதசுவாமி திருக்கோயில், ஊத்துக்குளி.

ஈரோடு – அத்தனூரம்மன் திருக்கோயில், அத்தனூர், சோளீஸ்வரர் திருக்கோயில், பெருந்துறை, அறப்பளீசுவரர் திருக்கோயில், கொல்லிமலை, தம்பிக்கலைஜயன்சுவாமி திருக்கோயில், தங்கமேடு, மத்தியபுரீஸ்வரர், கல்யாணவரதராஜப் பெருமாள், குலவிளக்கம்மன் திருக்கோயில், நஞ்சை காளமங்கலம், மொடக்குறிச்சி.

கோவை – தண்டு மாரியம்மன் திருக்கோயில், அவிநாசி சாலை, கோவை, கோனியம்மன் திருக்கோயில், பெரியகடை வீதி, கோவை, மாரியம்மன் திருக்கோயில், உதகை, ஐயப்பசுவாமி திருக்கோயில், புது சித்தாபுதூர், அனுமந்தராய சுவாமி திருக்கோயில், இடுகம்பாளையம்.

சேலம் – கோட்டை மாரியம்மன் திருக்கோயில், சேலம், வெண்ணங்கொடி முனியப்பசுவாமி திருக்கோயில், ஜாகீர் அம்மாபாளையம், சென்றாயசுவாமி மற்றும் காலபைரவர் திருக்கோயில், அதியமான் கோட்டை.

திருநெல்வேலி – பகவதியம்மன் திருக்கோயில், மண்டைக்காடு, நாகராஜா திருக்கோயில், நாகர்கோவில், பாளையஞ்சாலை குமார சுவாமி திருக்கோயில், சிந்துபூந்துறை.

தூத்துக்குடி – சங்கரராமேஸ்வரர் திருக்கோயில், தூத்துக்குடி, கற்குவேல் அய்யனார் திருக்கோயில், தேரிக்குடியிருப்பு, சுவாமி சிதம்பரேஸ்வரர் திருக்கோயில், செட்யாபத்து, இலஞ்சிக்குமாரர் திருக்கோயில், இலஞ்சி, முத்துமாலையம்மன் திருக்கோயில், குரங்கணி.

சிவகங்கை – திருமேனிநாதர் சுவாமி திருக்கோயில், திருச்சுழி, விருதுநகர், வல்மீகநாதசுவாமி பாகம்பிரியாள் திருக்கோயில், திருவெற்றியூர், ஆதிஜெகநாதப் பெருமாள் திருக்கோயில், திருப்புல்லாணி, சௌமிய நாராயணப் பெருமாள் திருக்கோயில் திருக்கோஷ்டியூர், மங்களநாதசுவாமி திருக்கோயில், உத்திரகோசமங்கை ஆகிய இடங்களில் பக்தி நூல்கள் கிடைக்கும்.



கோவை காந்திபுரத்தில் கட்டப்பட்டு வரும் தந்தை பெரியார் நூலகம் மற்றும் அறிவியல் மையக் கட்டுமானப் பணிகளை தமிழ்நாடு பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் துறை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். கோவை மாவட்ட ஆட்சியர் பவன்குமார், கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் நா.கார்த்திக் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஏர்போர்ட் ராஜேந்தர், கே.இராமநாதன், வித்யா, பொதுப் பணித் துறை அதிகாரிகள் உடனிருந்தனர்.




# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்புகளுக்கு, இளைஞர் அணி அமைப்பாளர்–துணை அமைப்பாளர்களை, மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாவட்ட வாரியாக நியமித்து வருகிறார்.

மண்டலம்–4 க்கு உட்பட்ட தருமபுரி கிழக்கு, தருமபுரி மேற்கு, நாமக்கல் கிழக்கு மற்றும் நாமக்கல் மேற்கு ஆகிய மாவட்டங்களில் நியமிக்கப்பட்ட இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், அந்தந்த மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக அறிவிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 07.04.2025 திங்கட்கிழமை | மாலை 4.00 மணி | தருமபுரி கிழக்கு | கே.ஜே.பிளாசா, சேலம் பிரதான சாலை, தருமபுரி. |
| 08.04.2025 செவ்வாய்க்கிழமை | காலை 9.00 மணி | தருமபுரி மேற்கு | என்.என்.மஹால், சேலம் புறவழிச் சாலை, அரூர், தருமபுரி. |
| 09.04.2025 புதன்கிழமை | காலை 9.00 மணி | நாமக்கல் கிழக்கு | நளா ஹோட்டல், திருச்சி சாலை, நாமக்கல். |
| 10.04.2025 வியாழக்கிழமை | காலை 9.00 மணி | நாமக்கல் மேற்கு | கொங்கு சமுதாயக்கூடம், அண்ணா சிலை அருகில், திருச்செங்கோடு. |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை–18

நாள் : 03-04-2025

